52

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10

**அறிவிப்பு**

காந்தீய- சர்வோதய இலட்சியங் களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

மலர் 12 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 மே | இதழ்—8

# தியாகக் கடல் ஜெ. பி.

'' அவர் தீமைகள் அனைத்தையும் எதிர்க்கவே பிறந்துள்ளார். தாய் நாட்டின் விடுதலைக்காக, தனது என்ற அனைத்தையும் தியாகம் செய்து விட்டார். துன்பங்கள் அனைத்தையும் தாங்கும் அவருடைய சிந்தையின் வீரத்திற்கு நிகரில்லை.'' இவ்வாறு காந்தியடிகளால் பாராட்டப்பட்டு புகழ்மாலை சூட்டப்பட்டவர் தான் எல்லோராலும் ஜெ. பி. என்று அன்பாக அழைக்கப்படும் ஜயப்பிரகாஷ் நாராயண்.

வறுமையில் பிறந்தும், நாட்டுப் பணியின் மூலம் தியாக வாழ்வை அமைத்துக் கொண்ட பெருமை மிக்க இந்தப் பெருந்தகை நாடு முழுதும் இன்று சூறவளியெனச் சீறிப்பாய்ந்து மக்களைத் தட்டியெழுப்பி ஊழல், சுரண்டல், நிர்வாகம் மற்றும் தேர்தல் முறை கேடுகள் தவறான கல்வி முறை ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் சக்தியை உருவாக்கி வருகிறார்.

அச்சமின்மைக்கும் துணிச்சலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர் ஜெ. பி. 1970 இல் பிகாரில் நக்சல் பாரிகள் இரண்டு சர்வோதய ஊழியர்களைக் கொலை செய்யப் போவதாக மிரட்டிய போது, சர்வோதய ஊழியர்கள் அச்சுறுத்தலையும், மரணத்தையும் கண்டு அஞ்சமாட்டார்கள் என்று கூறி அச்சவாலை ஏற்றுக்கொண்டு முஜப்பர் பூர் பகுதியில் தமது மனைவி திருமதி பிரபாவதி தேவியாருடன் கிராமம், கிராமமாகச் சென்று கிராமசுயராஜ்யக் கருத்தைப் பிரசாரஞ் செய்த அஞ்சா நெஞ்சர் திரு. ஜயப்பிரகாஷ்நாராயண்.

சில ஆண்டுகட்கு முன்னர் பிகாரில் வரட்சியால் கடும் பஞ்சம் ஏற்பட்டு இலட்சக்கணக்கான மக்கள், உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த போது ஓடிச் சென்று மாநில அளவில் நிவாரணக் கமிட்டி அமைத்து, மக்கள் சேவா நிறுவனங்கள், சர்வோதய ஊழியர்களின் ஒத்துழைப்போடு அவர் ஆற்றிய சீரிய பணியை நாடும், உலகமும் போற்றிப் பாராட்டியதை மறந்து விட முடியாது. மக்களின் துன்பம் துடைக்க ஓடோடிச் செல்லும் தியாகச் செம்மல் அவர்.

அன்று கொள்ளையன் அங்குலிமாலையை அன்பால் மனம் மாற்றி ஆட்கொண்டார் புத்தர் பெருமான். இன்று ஆண்டாண்டுகாலமாக சம்பல் பள்ளத் தாக்கில் கொலை, கொள்ளை, கடத்தல்களில் ஈடுபட்டு ஆட்சியினருக்குச் சவால் விட்டுக் கொண்டிருந்த கொள்ளையர்களை தங்கள் ஆயுதங்களுடன் சரணடையச் செய்தவர் புத்தரின் புனித பூமியான பிகார் தந்த மற்றொரு அன்புப் பிரசாரகர் ஜெ. பி.

சுதந்திரம் கிடைத்து 26 ஆண்டுகளுக்குப் பின்னரும் பசி, பட்டினி விலைவாசி ஏற்றம், இலஞ்ச ஊழல் பெருகி விட்டன. சோஷலிசத்தின் பெயரால் நாட்டின் பொருளாதாரம் நாசமாக்கப் படுகிறது. சோஷலிசத்தின் பெயரால் அரசியல் வாதிகளும், அதிகார வர்க்கத்தினருமே பயனடைகிறார்கள். எனவே தான் இன்றைய ஆட்சி முறையையும் ஊழல் மயமான சோஷலிசத்திற்கு எதிராகவும் குரல் எழுப்பி மக்கள் சக்தியைத் திரட்டி வருகிறார் அவர். நாடு முழுவதும் பரவி வரும் ஜெ. பி. யின் இயக்கத்தை பாஸிச இயக்கம் என்றும், ஜனநாயக விரோத இயக்கம் என்றும், ஒரு பக்கம் ஆட்சியாளர்கள் குறை கூறுகிறார்களெனில், மற்றொரு பக்கம் ஜனநாயக வாசனையைக் கூட அறிந்திராத இந்திய கம்யூனிஸ்டு கட்சி அதற்குச் சுருதி கூட்டுவது தான் விசித்திரமாக இருக்கிறது.

நாடு முழுவதும் முழுமைப் புரட்சிக் கருத்துக்களை பிரசாரம் செய்து ஊழல், விலைவாசி ஏற்றம், தவறான கல்விமுறை வேலையின்மைக்கு எதிராக மக்கள் சக்தியைத்திரட்டி வரும் ஜயப்பிரகாஷ் நாராயண், காந்திஜி கூறியதைப் போன்று சமுதாயத்தில் நிலவும் தீமைகள் அனைத்தையும் எதிர்க்கப் பிறந்துள்ள தியாகக்கடல்.

—ஆதாரம்: கிராமராஜ்யம்

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 105
1975 மே

## செயலரங்கம்

சென்ற இதழ்களில் கருத்தரங்கம், கருத்தரங்க மகாநாடு பற்றியெல்லாம் எழுதியிருந்தோம். இந்த இதழில் கருத்திலிருந்து தோன்றும் செயல் பற்றிச் சிறிது சிந்திப்போம். கருத்துக்கள் சிந்திக்கச் சிந்திக்கக் கூர்மை பெற்று இலட்சியங்கள் ஆகிவிடுதல் உலக வழக்கு. இலட்சியங்கள் கூர்மையாகி அவ்வாறு வளராவிடில் மக்கள் செயலாற்றுந்திறனை அவை கொண்டிருக்க முடியாது. எவ்வளவுக்கெவ்வளவு இலட்சியங்கள் கூர்மையாகி உரம் பெற்று உள்ளத்திற் பதிகின்றனவோ அவ்வளவிற்கு அவை மக்களை இயக்குந்திறனை பெறுகின்றன.

ஆனால் உண்மையான உயர்ந்த இலட்சியங்களை இம்மண்ணில் செயற்றிறமையுடையனவாக்குதல் எல்லார்க்கும் எளிதில் கைவரக்கூடிய தொன்றன்று. நாம் உள்ளுவது எல்லாம் உயர்வாக உள்ளல் வேண்டும். அது மட்டுமன்றி உள்ளத்தைச் சிறிதாக்கக் கூடிய யாதொன்றையும் உள்ளாது இருத்தலும் வேண்டும். இவ்விரண்டு கருத்துக்களையும் வள்ளுவரே கூறியிருக்கின்றார்.

உயர்ந்த இலட்சியம் கொண்டிருத்தல் வேண்டும்; சிறிய எண்ணங்கள் கொண்டிருத்தல் ஆகாது; அப்படியாயின் இந்நிலையில் நாம் என்ன செய்யலாம். வள்ளுவருக்கு விடை கூறும் முகமாக மகாத்மாகாந்தி அவர்கள் கூறும் ஒரு செயல் ஒழுங்கை இங்கு நாம் கவனிப்போம்; மகாத்மா கூறுவது யாது? மனித வாழ்வு என்பது அடுத்தடுத்து வரும் ஒரு தொடர்ச்சி முறையான இணக்க முறைகளேயாம். ஒருவர் கொள்கையளவில் உண்மையானது என்று அலுவலை மனதிற் கொள்ளலாம். ஆயின் அதனைச் செயல் முறைப்படுத்துவது என்பதோ இலகுவானதொன்றன்று

இங்கு மகாத்மா கூறுவதன் உட்பொருள் என்ன? மனிதன் உள்ளத்தில் எவ்வளவோ இலட்சியக் கோட்டைகளைக் கட்டலாம். இலட்சியம் என்பது தனி மனிதன் ஒருவன் தன் இதயவெளியில் தங்குதடையின்றிக் கட்டியெழுப்பிய கருத்துக்கோட்டையாகும். இந்தக் கோட்டையை எழுப்புவதில் அவனுக்கு அதிக சிரமம் இருக்காது. அவனின் கல்வி, கற்பனை. உணர்ச்சி யெல்லாம் அவனுக்கு பேருதவியாகும்.

ஆனால் அவன் செயலில் இறங்கும் போது மண்ணில், புழுதியில், கல்லில் அல்லவா கோட்டை கட்ட வேண்டும். கட்டும் போது மாறுபட்ட இலட்சியம் கருத்துக்கள் எல்லாம் வேறு மனிதரோடு சேர்ந்து அவனை வாட்டுமே. வியர்வை, இரத்தம், கண்ணீர் இவற்றை குழைத்து அழுக்காறு, பொறாமை, வஞ்சகம் அறியாமை, சோம்பல் ஆகிய புயல்களை எதிர்த்து மாளிகைகள், கோட்டைகள் அல்ல, சிறு குடிசைகளே கட்ட வேண்டிய நிலையிலிருக்கின்றானே. அவன் இலட்சியம் விண்ணைத் தொடலாம். ஆனால் செயல் முடிவு மண்ணிலிருந்து சில அடிகள் தான் தலைநிமிர்ந்து நிற்கக்கூடும். அதற்காக மனிதன் சோர்ந்து விடக் கூடாது. கருத்துத் தெளிவால் வந்த இலட்சியம் உள்ளத்தினின்று ஒருவனுக்கு நெஞ்சு உரம் அளிக்க வேண்டுமேயன்று அவன் தோற்றுவிட்டானே என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடாது. பின்னர் அந்த மனிதன் தான் மண்ணில் கட்டியெழுப்பிய பத்துப்பன்னிரண்டடி குடிசை உயரத்திலிருந்து இன்னும் ஒரு மாளிகை கட்டியெழுப்ப இலட்சியம் கொள்ள வேண்டும். பின்னும் ஒரு குடிசையையே, கட்டினாலும் காரியமில்லை.

இதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் ஒரு தொடர் வரிசை இணக்கங்கள் என்று கூறினார். சமூகம் பெரியது, உலகம் பெரியது, பிரச்சனைகள் பல்லாயிரம், மனிததேவைகள் அளப்பல; ஆசாபாசங்கள் கோடி கோடி: இவற்றிற்கிடையே ஒரு தனி மனிதன் உள்ளத்து இலட்சியம் ஒரு சிறு துரும்பு புயலில் ஊசலாடும் ஓர் சருகு. அக்கோடிச் சக்திகளுக்கிடையில் இந்தக்கருத்து இலட்சியம் ஒரு அடி எடுத்து வைத்தாலும் போதும் இந்தப் போதுமென்ற இணக்க மனப்பான்மையே கருத்திலட்சிய விருட்சத்துக்கு ஒரு குருத்து. கருத்தரங்கங்கள் கண்ட கனவுகள், சிதறிவிடுமென்ற அச்சமின்றி சிறு பணியேனும் புரிந்தாலும் காந்தியத்திற்கு ஒரு பச்சிலை.

எண்ணம், கருத்து, இலட்சியம், இது உயர்வு. பின்னர் செயலில் இறங்கல், இது சிறிது இறக்கம்; இது மனமே- மண்- மனம் என்ற துவித மாறுபாடு. இந்தக் கிரமத்திலேயே உலகம் இயங்குகின்றது. இடையறாது மனம், மண்ணை உயர்த்த மாறி மண் மனதை உயர்த்த மனிதன் படிப்படியாக உயர்ந்து வருகிறான். மனம் மண்ணில் இறங்க வேண்டும். வினை செய்ய வேண்டும். இடையில் முறிந்து விடாது செய்த அளவில் இணங்கித் தேறி பிறகும் செயல் புரிய வேண்டும். இது காந்தி சொல்.

## அன்பர் தபால்

தங்கள் வெளியீடான 'காந்தியம்' இதழ் எமது பகுதியில் பரவுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். கடந்த 30. 03. 75 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வோதய ஊழியர்கள் மகாநாட்டில் எமது மன்றத்தினரும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு எமது மன்றத்தினர் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

கிழக்கிலங்கை க பாரதிதாசன்,
காந்தி இளைஞர் மன்றம் தலைவர்.
மட்டக்களப்பு.

## காந்தி ஜயந்தி விழா பேச்சுப் போட்டி

அடுத்த இதழில் காந்தி ஜயந்தி விழா பேச்சுப் போட்டி பற்றிய விபரங்கள் வெளிவரும்.

# 'சத்தியமே கடவுள்,' 'அன்பே சிவம்'

## அதுவே சர்வோதயம்

'புரட்சி' என்ற சொல், பலருடைய மனதில் ஒருவித புரட்சியை உண்டாக்குவது வழக்கம். குழந்தை 'உடம்பு புரட்டுகிறது' என்று சொல்லும் போது 'புரட்டுதல்' (புரட்சி) என்ன கருத்தில் உபயோகிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்குக் கூடச் 'சர்வோதயம்' புரட்சியை உண்டாக்குவதில் ஈடுபடாததன்மையது, மிகவும் இயற்கையோடியைந்தது என்று சொல்லி வைப்பதால் சர்வோதயப் புரட்சியை ஒருவாறு விளங்கிக் கொள்ளுதல் சுலபமாகிறது என்னலாம். உண்மையில் 'சர்வோதயம்' என்பது என்ன? என்று சிந்தித்தல் நல்லது. எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்ற சிறந்த அன்புத்தத்துவமே சர்வோதயமாகும். ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என்று கூறிய பெரியாரின் குறிக்கோளுக்கமைய நோக்கும் போது தான் அன்பும்சத்தியமும்ஒன்று சேர்ந்த சர்வோதயக் கருத்துக்களை ஒருவாறு விளங்கிக் கொள்ளுதல் சுலபமாகும். 'சத்தியமே கடவுள்' என்ற காந்திஜியின் நம்பிக்கையானது 'அன்பே சிவம்' என்ற திருமந்திரக் கருத்துக்களுடன் சேர்ந்து உண்டாக்கிய பொருள் பொதிந்த தத்துவமே 'சர்வோதயம்' என அழைக்கப்படுகிறது.

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்று குரல் எழுப்பப்பட்ட போது 'முதற்புரட்சி' தோற்றியதெனப் பலர் கருதுகிறார்கள். அரசர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து எழுந்த இந்தக் கோஷங்கள் முதலாளிகளுடைய ஆதிக்கத்தைத் தான் உண்டாக்கி விட்டன. முதலாளிகளை அடக்க இன்னும் பெரிய புரட்சிகள் எழுந்தமையும், அதனால் சர்வாதிகாரங்களும் அமைதியின்மையும் உலகில் தோன்றியமையும் சரித்திரமாகி விட்ட கதைகளாகும். மனித இனம் தான் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து சந்தோஷமாக இருப்பதற்குப் பலமுறை முயற்சித்துள்ளது. ஒவ்வொரு முயற்சியும் ஒரு பகுதியாருக்கு இன்பம் கொடுக்க என எழுந்தபோதெல்லாம் இன்னொரு சாரார் துன்பப்பட்டதையே வரலாற்றேடுகள் எமக்குக் காட்டுகின்றன. இதற்கு மனித இனம் ஒரு நல்ல தீர்வு காண விரும்பியதும் நூதனமல்ல. 'சர்வோதயம்' அவ்வித தீர்ப்பை உதவக் கூடியதென காந்திஜீ கருதினார். பல பெரியோர்களும் அக் கருத்தை ஏற்று அங்ஙனம் சிந்திக்கிறார்கள்.

'சொல்லுதல் யாருக்கும் எளிது, சொல்லியபடி செய்தல் மிகவும் கஷ்டமாகும்.' 'சர்வோதயம் கைகூடுவது அகிம்சை கைகூடுவதைப் பொறுத்திருக்கிறதாக' மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார். சத்தியத்தில் உறுதியாக இருப்பதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருப்பதும் தவ ஒழுக்கத்தாலன்றி வெறுங்கோஷங்களாலோ, மிரட்டல்களாலோ வேறு மந்திர தந்திரங்களாலோ நடக்கக்கூடியதல்ல. 'எல்லோருக்கும் இன்ப வாழ்வு கொடுக்கும் அந்தச் சீரிய சர்வோதய தத்துவம் தவவாழ்க்கையுடைய வருக்கன்றி, ஏனையவர்களுக்கு எவ்வளவுக்குச் சாத்தியமாகும், என்று சொல்ல முடியாது. ,தவமும் தவமுடையார்க்கன்றி, ஏனையோருக்கு முடியாதென்பதை உலகம் அறியும். சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்ட காந்திஜியினுடைய உள்ளத்திலெழுந்த, கள்ளமற்ற, தீமை புரியாத, சக்தி வாய்ந்த, உயிருள்ள, எல்லோருக்கும் இன்ப வாழ்வு கொடுக்க எழுந்த, அந்தச் சர்வோதய தத்துவத்தை நன்கு பயன்படுத்தினாலன்றி, அதன் நோக்கங்கள் நிறைவேறுவது கஷ்டமாகவும் கூடும். சர்வோதய ஊழியர்கள் மிகவும் நிதானமாகத் தமது கடமைகளை அறிந்து உணர்ந்து வாழ வேண்டும். சர்வோதயப்புரட்சி நடந்து, உலகம் இன்புற்றிருப்பதாய் இருந்தால், அவ்வளவுக்குத் தியாகம், மனித அன்பு உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டும். 'கத்தியின்றி, இரத்தமின்றிப் புரட்சி செய்யும் போது சத்தியத்தின் நித்தியத்தையும் நம்பும் ஒரு கூட்டத்தாராலன்றி மற்றையவர்களால், இந்த இலட்சியம் அடைய முடியாததாகி விடவும் கூடும்.

வினோபாஜீ சர்வோதய ஊழியர்களைப் பற்றிக் கூறுமிடத்து, ''ஒவ்வொரு ஊழியரும் சர்வ சுதந்திரர். அவருக்கு ஒரு நிர்ப்பந்தமுமில்லை. அவர் தனித்தும் வேலை செய்யலாம். கூட்டாகவும் செய்யலாம். பல வேலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்றையோ, பலவற்றையோ தம் சக்திக்குகந்தவகையில் ஏற்றுச் செய்யலாம். அல்லது அவருக்குத் தோன்றும் இதே வகையான வேறு வேலை உண்டானால் அதைச் செய்வதற்கு அவருக்குத் தகுதியும் சக்தியும் இருக்குமானால், அதைச் செய்வதிலும் ஆட்சேபனையில்லை, என்று கூறி வந்தவர், 'அவர் ஒரே ஒரு காரியத்தைத் தான் செய்யக்கூடாது;' அதாவது, 'சத்தியத்தையும் அகிம்சையையும் நழுவவிடக்கூடாது,' என்று எச்சரிக்கையுடன் முடிக்கிறார். 'ஊழியர் என்பதற்காக அவருக்கு அதிகாரம் எதுவுமில்லை. உள்ளவைகளெல்லாம் கடமைகளே,' என்பதும் அப்பெரியாரின் வாக்குகளாகும்.

சர்வோதயப்புரட்சியை உண்டாக்க விரும்புகிறவர்கள், 'சரீரபலம், மனோபலத்துடன் அறிவும், ஆற்றலும், ஆத்ம சக்தியுமுள்ளவர்களாக விளங்க வேண்டும் என்பதும் பல பெரியார்களுடைய கருத்தாகும். அத்தகைய தீரர்கள் மக்களிடத்தில் சுயதேவைப் பூர்த்திக்குழைக்கவும் தன்னம்பிக்கையும் ஆத்ம சக்தியும் பெறக்கூடிய முறையில் வாழவும் வேண்டிய எழுச்சியை மனித உள்ளங்களில் உண்டாக்குதல் வேண்டும். இந்த இலக்குடன் வேலை

( 4 ஆம் பக்கம் பார்க்க)

திரு. இ கந்தையா
தலைவர்
காந்தி சேவா சங்கம்,
உருத்திரபுரம்.

# ஜெ.பி. இயக்கத்திற்கு தார்மிக ஆதரவு

## தமிழ் நாடு சர்வோதய சங்கம் தீர்மானம்

தமிழ் நாடு சர்வோதய சங்கத்தின் அடிப்படை நோக்கமே சமுதாயத்தில் நிலவி வரும் அநீதிகளை எதிர்த்து, மக்களிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்குவதேயாகும். எனவே தற்பொழுது சமுதாயத்தில் பரவலாக நிலைத்து வரும் ஊழல், லஞ்சம், விலைவாசி ஏற்றம், பதுக்கல், தேர்தலில் காணப்படும் சீர்கேடுகள், இதனால் மக்கள் மனதில் ஜனநாயக முறைகளின் மீது ஏற்படும் அவநம்பிக்கை, வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி முறைகளில் காணப்படும் குறைபாடுகள் ஆகிய பிரச்சனைகள் அனைத்தையும் எதிர்த்து இப்பொழுது நாடெங்கிலும், குறிப்பாக பிகாரில் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் வழிகாட்டியாக இருந்துகொண்டு சத்தியம், அகிம்சை, தன்னடக்கம் ஆகிய முறைகளின் அடிப்படையில் நடைபெற்றுவரும் மக்கள் இயக்கம் சங்கத்தின் குறிக்கோள்களுக்கு ஒத்ததாகஇருக்கிறகாரணத்தால் மேற்படி இயக்கத்திற்கு சங்கம் தமது தார்மிக ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது. பொதுவாழ்வில் காணப்படும் இத்தகைய சீர்கேடுகளை மக்கள் நன்குணர்ந்து விழிப்புடன் இருந்து மாறுதலைக் காண முனைந்திருப்பது ஜனநாயகத்திற்கு நம்பிக்கையூட்டுவதாகவுமிருக்கிறது. இவ்வாறு வளர்ந்து வரும் இயக்கம் எதிர்காலத்தில் ஒரு நிலையில் சத்தியாக்கிரக இயக்கமாகவும் மலரக்கூடும். அப்பொழுது சங்கம் தனது வசதிகளைச் சத்தியாக்கிரக இயக்கத்திற்குப் பயன்படுத்தாது, சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள விரும்பும் சங்க உறுப்பினர்கள் சங்கத்திலிருந்து விலகி தனிப்பட்ட முறையில் ஈடுபடலாம். அத்தகையோர்களுக்குச் சங்கம் தனது தார்மிக ஆதரவை நல்கும்.

ஆதாரம்: கிராமராஜ்யம்

## இலட்சம் ரூபா பரிசு

தமிழ் நாட்டில் ஏறக்குறைய நாலு கோடி பனைமரங்கள் உள்ளன.

அபாயமின்றிச் சுலபமாக மரமேறவும், அதிகப்படியான பதநீரைப் பெற்று, வருவாயை உயர்த்திக் கொள்ளவும், சிறந்ததோர் சாதனத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்போருக்கு கதர், கிராமத் தொழில் ஆணைக்குழு ஒரு இலட்சம் ரூபாய் பரிசாக அளிக்க முன்வந்துள்ளது.

— ஆதாரம்: தமிழரசு

## வரப்பெற்றோம்

" செங்கதிர் "
60, புங்கன் குளம் வீதி,
கொழும்புத்துறை- மேற்கு,
யாழ்ப்பாணம்

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்யக்கூடிய நற்குணம்நிறைந்த இளைஞர்கள் பலர் ஆயிரக்கணக்கில் அல்லும் பகலும் நல்ல தலைமையில் உழைப்பதும் மிகவும் அவசியமாகிறது. காந்திஜீ தமது வாழ் நாளில் அகிம்சை மூலமாக அரசியலில் புரட்சி ஒன்றை நடத்திக்காட்டியுள்ளார். இன்றுள்ளவர்களும் அந்தவிதமான முறையில் பொருளாதார, சமூகப் புரட்சியையும் உண்டாக்கினலன்றி 'சர்வோதயம்' என்ற குறிக்கோள் வெற்றுப் பேச்சுகளாகவே முடியும். மக்களும் நாடும் இவ்விதமான சூழ்நிலைகளுக்கு வளர்க்கப்பட வேண்டும். சர்வோதயப் புரட்சிக்கு இவையெல்லாம் நல்ல ஆரம்ப சிந்தனைகளாகும்.

## சர்வோதய பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரத்தில் நாள் தோறும் பிடி அரிசி இட்டு இதனை மாதந்தோறும் சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைச் சென்ற இதழ்களில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

வெள்ளவத்தை விவேகானந்த வீதி
திருமதி. வ. இரங்கநாதன்
'' க. கந்தசாமி
'' இ. சிவஞானசுந்தரம்
'' த. சோமசுந்தரம்
'' செ. துரைராஜா
'' யோ. தியாகராஜா
42 ஆவது ஒழுங்கை
திருமதி. இ. சிவகாந்தன்
ஈ. ஏ. குரே மாவத்தை
திருமதி. ம. சோமசுந்தரம்
'' சோ. கனகசபை
'' க. அருளானந்தம்
'' ஆர். தம்பிராஜா
'' சு. சிவசுப்பிரமணியம்
'' ச. தட்சிணாமூர்த்தி
'' இ. செல்லையா
'' குமாரவேலுப்பிள்ளை
'' இ. நடேசன்
'' இராசசுந்தரம்
'' பாலசுப்பிரமணியம்
'' நி. நடராஜா
'' இ. கதிர்காமத்தம்பி
'' இ. நம்பிரெட்டியார்
'' வி. பாஸ்கரன்
'' கண்ணுத்துரை
'' தை. பேஜ்
'' டெபிமாட்டின்
'' ஜி. தோமஸ்
'' செ. செல்வரத்தினம்
'' யோ. இராசரத்தினம்
'' வி. விநாயகமூர்த்தி
'' ப. சிங்கராசா
திருமதி. வி. செல்வநாதன்
'' ஆறுமுகம்
'' இ. துரைரத்தினம்
காலி வீதி
'' சி. செல்வசிரஞ்சீவி
'' ஆ. குகராஜன்

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.